1986 நவம்பர் 14]

என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அவ்வாறு வந்திருந்தால் நட்ட செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிற அந்தப் பணத்திற்கும் அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

குமரி மாவட்டத்தில் பரளியாறு மின் திட்டம்.

13—(*வினா எண். 10008)—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பரளியாறு மின்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) ஆம்.

(ஆ) ரூ. 17.70 கோடி மதிப்புள்ள 25 மெகாவாட் திறன் கொண்ட இத்திட்டம் மத்திய மின் அதிகார மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. அதன் ஒப்புதலும் மற்றும் திட்டக்குழு ஒப்புதலும் கிடைத்தவுடன், நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரளியாறு மின்திட்டத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 25 மெகாவாட் திறன் கொண்டதுதான். ஆனால் மற்ற விதங்களில் அதாவது அனல் மின்சார நிலையம் போன்றவற்றை அமைக்க பல இடங்களில் பல கோடி ரூபாய் செலவு செய்வதுபோல் அல்லாமல் இந்தத் திட்டத்திற்கான செலவு மிகக் குறைவாக இருப்பதால் வெகு விரைவில் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மார்ச் 1984-ல் மைய மின் ஆணையத்தின் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டது. மார்ச் 1985-ல் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழ்நிலை இலாக்கா அனுமதி தந்திருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மைய மின் ஆணையம், மத்திய நீர் வாரியம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

போன்ற பல்வேறு துறைகளால் ஆராயப்பட்டு வருகிறது. மத்திய ஆணையம் மற்றும் திட்டக் குழுவினுடைய ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரளியாறு மின்சாரத் திட்டத்தைப்போல் இன்னும் அங்கே உலக்கையருவி பகுதியில் ஒரு திட்டம் அமைக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தைக்கூட அரசு பரிசீலனை செய்து, வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா போடப்படவேண்டும்.

திருபுவனம், பந்தநல்லூர் பகுதியில் கோரைப்பாய் நெய்யும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

14—(*வினா எண். 8359)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருபுவனம், பந்தநல்லூர் பகுதியில் கோரையில் பாய் நெய்யும் தொழிலாளர்களுக்கென கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் நியாயமான விலையில் கச்சாப் பொருள்கள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர், திருபுவனம் பகுதியில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாய் நெசவுத் தொழிலை நம்பி இருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து அவர்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக அந்தத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட கச்சாப் பொருட்களை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர், திருபுவனம் பகுதியில் கூட்டுறவு கோரைப்பாய் நெய்யும் தொழிற்சாலை ஒன்றைத்